பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி — வியாழன் வெளியீடு.

போர் ! — பொள்ளாச்சி. 30—8—51. விலை அரையணா. 6-பக்கம். — வெற்றி 2

தேர்தல் ஜூரம் அடிக்கிறது.

ஸ்ரீ சி. சுப்ரமணியம் செய்வது சரியா?

பொள்ளாச்சித்தாலூக்கா கிணத்துக்கடவு பிர்க்காவுக்கு சட்டசபைத் தேர்தலுக்கு கோவை ஸ்ரீ சி. சுப்ரமணியம் நிற்பதாகத்தெரிகிறது. கிணத்துக்கடவு பிர்க்காவிலுள்ள முக்கியஸ்தர்களைப் பார்த்துதான் தேர்தலுக்கு நிற்பதாகவும் ஆதரவு கொடுக்கும்படியும் ஸ்ரீ சி. சுப்ரமணியம் கேட்டுவருவதாக நமக்குச்செய்திகள்வருகின்றன இவர்காங்கிரஸ்சார்பில்தான் நிற்கப்போகிறார். தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல்கமிட்டியில் மெம்பராக உள்ள இவர் கிணத்துக்கடவு பிர்க்காவுக்கு யார் அபேக்ஷகர் என்று தேர்தல் கமிட்டியார் இன்னும் அறிவிக்காமல் இருப்பதற்கு முன்னாடியே தான் நிற்கப்போவதாகச் சொல்லி வருவது சரியா? தேர்தல் போர்டார் இவரைத்தான் நிறுத்துவது என்று முடிவு செய்துவிட்டார்களா? இவரே தான் நிற்பது என்றால் மற்றவர்கள்எதற்காகரூ 500 கட்டிகாங்கிரஸ்தேர்தல் கமிட்டிக்கு மனுசெய்யவேண்டும். இது வீண்தண்டம்தானே. தேர்தல் கமிட்டியில் ஸ்ரீ சி சுப்ரமணியம் இருக்கிறார், அவருக்குத்துணையாக ஸ்ரீ சி. பி. சுப்பையாஇருக்கிறார். இவர் ஆதரவைத்தேடி பிரச்சாரத்தையும் ஆரம்பித்துவிட்டார். இந்நிலையில் மற்றவர்களைக் கண்டிப்பாய் தேர்தல் போர்டார் [illegible]க்கமாட்டார்கள் என்று பயந்துகொண்டு பலர் மனுப்போடாமல் இருக்கின்றனர். இதற்குப்பொறுபபு சி. சுப்ரமணியம் தான்.

ஒரு பொறுப்புள்ள பதவியில் உள்ளவர் இப்படி அவசரப்பட்டுக்கொண்டு கமிட்டியின் முடிவு தெரிவதற்கு முன்னாடியே தான் நிற்கப்போவதாக ஆதரவுதேடுவது பொறுப்பற்றதனமாகும். பொள்ளாச்சித்தாலூக்கா காங்கிரஸ் கமிட்டியாரோ மற்றவர்களோ சுப்ரமணியம் அந்தத்தொகுதியில் நிற்பதை விரும்புவதாகத் தெரியவில்லை. இந்நிலையில் தேர்தல் போர்டார் கட்டாயமாகத் திணிப்பார்களேயானால் அது நிச்சயம் தோல்வியில்தான் முடியும். அது காக்கிவிற்கு கெட்டபெயர் தேடுவதாகும்.

கிணத்துக்கடவுத்தொகுதியில் சுப்ரமணியத்திற்கு என்ன? ஆதரவு இருக்கிறது என்பதை நன்குதெரிந்து தேர்தல் போர்டார் அபேக்ஷகர்களைத் தேர்ந்தெடுக்கக் கோருகிறோம். மந்திரிகளிடத்திலும், தலைவர்களிடத்திலும் ஒருவருக்குச் செல்வாக்குஇருக்கிறது என்றால் அவருக்கு பொதுமக்களிடத்தில் என்ன செல்வாக்கு இருக்கிறது என்பதையும் கவனிக்கவேண்டும். மேலிடத்தின் நெருக்கடி தீருவதற்காக மக்கள் விரும்பாத நபரை நிறுத்தினால் அவர்கட்கு நல்லபாடம்கற்பிக்க மக்கள் தயாராய் உள்ளனர். ஆகவே சுப்ரமணியம் விஷயத்தில் தேர்தல் போர்டார் அதிக கவனம் செலுத்தக்கோருகிறோம். பொள்ளாச்சிடவுன் பிர்க்காவுக்கு ஸ்ரீ வி. கே. பழனிச்சாமிக்கவுண்டரும் ஸ்ரீ பி. என். மகாலிங்கமும் இருவருமாக தேர்தல்கமிட்டிக்கு மனுச்செய்வதாகத்தெரிகிறது. இவர்களில் காங்கிரசின் பெயரால் யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது பெரியபிரச்சனையாக இருக்கிறது, இது தேர்தல் போர்டுக்கே பெரிய சிரமம் தான். ஹரிஜன தொகுதிக்கு ஸ்ரீ பி. கே. திருமூர்த்தி வால்பாறை முத்துசாமி மற்றும் சிலர் மனுப்போடுவதாகத்தெரிகிறது. இந்த தடவை தேர்தலில் அநேகமாக பணக்காரர்கள் தான் வருவார்கள் போலிருக்கிறது. ஊழியர்களுக்கு இடமேகிடையாது. தற்போதைய எம். எல். ஏ. ஸ்ரீ பி. ஆர். கந்தசாமிக்கவுண்டர் தேர்தலுக்கு மீண்டும் நிற்பாரா என்று எந்தப்பக்கம் விசாரித்தாலும் நிற்கமாட்டார், நிற்கப்போவதில்லை என்ற பதில்கள் தான் வருகிறது. புத்திசாலித்தனமாக அவர் விலகிக்கொள்வதைப் பலர் பாராட்டுகின்றனர். இன்னும் தேர்தல் விபரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

‘வாசியே’

நாடுதோறும் மக்கள்காத்தை
  நாடுமிந்த வாசியே
வீடுதோறும் மக்கள்மனதில்
  விரும்புமிந்த வாசியே
தேடுவோரைக் கூடிமகிழச்
  செய்யுமிந்த வாசியே
பாடுவோரைக் கூடிமகிழப்
  பண்ணுமிந்த வாசியே
பாவலர்கள் நாவலர்கள்
  பட்சமுறும் வாசியே
ஆவலுடன் சேவைசெய்ய
  அஞ்சிடாத வாசியே
மேவும்வேலுச் சாமியவரால்
  வெளியுலாவும் வாசியே
பூவுலகம் நீண்டவாண்டு
  புகழ்பொள்ளாச்சி வாசியே!

[கே. எஸ். கிருஷ்ணசாமி

துவக்கவிழா.

14-ம் தேதி உயர்நிலைப்பள்ளியில்மாண
வர் இலக்கிய மன்றத்தின் துவக்கவி
ஸ்ரீ ராமகிருஷ்ணய்யர் தலைமையில் நடை
பெற்றது. ஸ்ரீ வெங்கிடுசுப்புபிள்ளை அ
வரையும் வரவேற்றார். தமிழ் பெருந
கள் என்பது பற்றி கோவை ஸ்ரீ ஸ்ரீத
பிரஸாத் நீண்டநேரம் சொற்பொழிவா
றினர்.

ஃ ஃ ஃ

கலைவாணி.

கலைவாணி என்ற கையெழுத்துப்பிர
சுதந்திரதின மலராக அதன் ஆசிரியர்
எஸ். வெங்கடேசன் இல்லத்தில் இளை
காங்கிரஸ்காரியதரிசி அ. பாசித் தலைமை
அ. முத்துசாமியால் துவக்கி வைக்கப்ப
டது. சுதந்திரமும் பத்திரிகைகளும் என்ப
பற்றி மு. சீனிவாசன் அ. ராமச்சந்திரன் ஆ
யோர் பேசினார்கள்.

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 30—8—51. வியாழன்.

ஜாக்கிரதை!

—OOO—

தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல் கமிட்டி பார் செப்டம்பர் மாதம் 10-ம் தேதிக்கு மேல் சட்டசபைக்கு அபேக்ஷகர்களைத் தேர்ந்தெடுக்க ஜில்லா வாரியாகச் சுற்றுப் பிரயாணம் செய்யப்போகிறார்கள்.

கோவை ஜில்லாவில் ஈரோடில் ஒரு நாளும் கோவையில் ஒரு நாளும் தங்கி ஜில்லாவில் ஒவ்வொரு தொகுதிக்கும் யார் யாரைச் சட்டசபைக்கு நிறுத்தலாம் என்று, காங்கிரஸ் கமிட்டியினர், காங்கிரஸ் ஊழியர்கள், மற்றும்முக்கியஸ்தர்கள் முதலியோரை அபிப்பிராயம் கேட்கப் போகிறார்கள். இந்த சமயத்தில் வாக்காளர்கள் உள்பட அனைவரும் ஜாக்கிரதை யாய் இருந்து தங்கள் தங்கள் தொகுதிக்கு யோக்கியர்களாயும், லஞ்சம் வாங்காதவர்களாயும், பொதுஜன தொடர்பு உள்ளவர்களாயும், தகுதியும் திறமையும் வாய்ந்தவர்களாயும் பார்த்து எங்கள் தொகுதிக்கு இன்னாரைத்தான் நிறுத்தவேண்டும் என்று தேர்தல் கமிட்டியாரிடம் திட்டமாய்த் தெரிவித்துவிடவேண்டும். அதற்கு இப்பொழுதே அனைவரும்தயாராகவேண்டுகிறோம். இப்போதுசும்மாஇருந்துவிட்டு அபேக்ஷகர் பெயர் அறிவிக்கப்பட்டபின் ...து ...த்தை இது சொள்ளை என்ப...ல் ...ன் இல்லை. பொதுஜன அபிப்பிராயத்திற்கு மதிப்புக்கொடுக்கும்படி தேர்தல் கமிட்டியாரை வற்புறுத்தவேண்டும். ...ட்டாயம் பலன் உண்டு.

பொள்ளாச்சித் தாலூக்காவிற்கு இரண்டு எம். எல். ஏ. ஸ்தானங்களுண்டு. ...தற்குக்குறிப்பாக ஸ்ரீ வி. கே. பழனிச்சாமிக்கவுண்டர், ஸ்ரீ என். மகாலிங்கம், ...னவ ஸ்ரீ சி. சுப்ரமணியம், ஸ்ரீ எஸ். எம். பழனிச்சாமி முதலியோர் மனுப் போடுவதாகத் தெரிகிறது. இவர்களில் யாரை நம் பொள்ளாச்சித் தாலூக்காவிற்கு நிறுத்தவேண்டும் என்பதைக்கண்டிப்பாய் தேர்தல் கமிட்டியிடம் தயவு தாட்சண்யமின்றி எடுத்துச் சொல்லிவிடவேண்டும். இதில் ஊழியர்கள் எவ்விதத் தயக்கமும் காட்டக்கூடாது. பணக்காரர்கள் சங்கடம் நமக்கு எதற்கு என்று வீணே வீட்டில் இருப்பார்களேயானால் பின்னால் பெரிதும் நம் தாலூக்கா பாதிக்கப்படும். தாலூக்கா நலனை மனதில் வைத்து விருப்பு வெறுப்பின்றி அபிப்பிராயங்களை எடுத்துச்சொல்ல அனைவரும் முன் வரவேண்டுகிறோம். பொதுஜன அபிப்பிராயத்தை மதிக்கும்படி தேர்தல் கமிட்டியாரையும் வேண்டுகிறோம். அபேக்ஷகர்கள் முதல் ஆதரவாளர்கள்வரை வாக்காளர்கள் உள்பட ஜாக்கிரதை என்பதைமட்டும் எச்சரிக்கிறோம்.

சட்டசபைக்கு யார் வேண்டும்?

வரப்போகும் சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் அபேக்ஷகர்களை நிறுத்த தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல் போர்டார் செப்டம்பரில் சுற்றுப்பிரயாணம் செய்து பொதுஜன அபிப்பிராயம் சேகரிக்கிறார்கள். பொள்ளாச்சித் தாலூகாவிற்கு இரண்டு ஸ்தானங்கள் உண்டு. இதற்கு யாரை நிறுத்தலாம் என்பதை ஒவ்வொருவரும் சுருக்கமாய் எழுதி அனுப்பினால் நமது வாசியில் பிரசுரிக்கப்படும். உடனே செய்யுங்கள்.

மருத்துவர் குலசங்கம்.

18-ம் தேதி சனியன்று ஷை சங்கத்தின் மகாசபைக்கூட்டம் சீனு கடையில் ஸ்ரீ ஆர். நஞ்சப்பா தலைமையில்கூடியது. புது வருஷ நிர்வாகிகளாக கீழ்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் ஸ்ரீ பி. எம். சுப்பையன், உபதலைவர் ஆர். பொன்னுசாமி காரியதரிசிகள் எம். ராமசாமி, பி. எம். கந்தசாமி, பொக்கிஷதார் ஆர். நஞ்சப்பா, மற்றும் 9-பேர் கமிட்டி மெம்பர்களாகத்தேர்ந்தெடுக்கப்பட்டனர். நல்லமுயற்சியால் வளர்ச்சியடைவதின்நோக்கம் பற்றி பலர் பேசினார்கள்.

மோகனசுந்தரம்.

ஜே. ஆ... ரங்கராஜுவின் துப்பறியும் நாவலான மோகனசுந்தரம் திரைப்படமாக சுகுமார் பிக்சர்ஸார் வெளியிட்டிருக்கிறார்கள். திரைக்கதை, வசனம், டைரெக்ஷன் பொறுப்பை ஸ்ரீ ஏ. டி. கிருஷ்ணசாமி பி. ஏ. ஏற்றுக்கொண்டு வெகுதிறமையாகவே முடித்திருக்கிறார். வசனம் பிரமாதமாகவும் கருத்துடன்கூட ஹாஸ்யமாகவும் எழுதியிருக்கிறார். கதைப்போக்கில் ... யில்லாத ஓரிரு கட்டங்கள் இருக்கின்றன. நாவலை திரைக்கதையாக உருவாக்குவதில் வெற்றிகண்டுவிட்டார் ஒளிப்பதிவு நன்றாக இருக்கிறது! ஒலிப்பதிவு சுமாராக இருக்கிறது! பாட்டுகள் பாவாயில்லை! நடிப்பில் டி. ஆர். மகாலிங்கம், பி. ஆர். பந்துலு இருவரும் முதல் பிரைஸ் அடிக்கின்றனர். சாரங்கபாணியைப்பற்றி எழுதவேண்டிய அவசியம் இல்லை. வழக்கம்போல் சிறப்பாக நடிக்கிறார். வரலக்ஷிமிக்கு சந்தர்ப்பமிருந்தும் உணர்ச்சியில்லாமல் நடிக்கிறார்! மற்றபடி எல்லா நடிகர்களும் சுமாராகதங்கள் பாத்திரத்தை உணர்ந்து நடிக்கின்றனர். சுசீலா நடிப்பதாகவே தெரியவில்லை. மொத்தத்தில் உல்லாசப் பொழுதுபோக்குக்கு நல்லபடம்!

சிலம்ப விளையாட்டு.

சுதந்திர விழாவையொட்டி நகர காங்கிரஸ் கமிட்டியாரால் மாலையில் நடைபெற்ற ஊர்வலத்தில் பி. எஸ். ஷேக்கிமாம், எம். மஸ்தான்சாயபு குழுவினரால் சிலம்பவிளையாட்டு தெருக்களின் முக்கிய இடங்களிலும் தேர்நிலைவெளியிலும்நடைபெற்றது. ஷை விளையாட்டில் ஏ. குழந்தைவேல், ஏ. நாதன், ஏ. தங்கவேல், ஜாபர், எஸ். ராஜமாணிக்கம், ரஹீம், ஷண்முகம், அங்கப்பன், இமாம்சாயபு, கந்தசாமி சிறுவர்கள் டி. திருமலைசாமி, ராஜகோபால் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நெகமம்.

சுதந்திர தினத்தன்று பள்ளிக்கூடங்கள் போலீஸ் ஸ்டேஷன் முதலிய இடங்களில் கொடிகள் யேற்றப்பட்டன. சினிமாத்தியேட்டரில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான்கள் ஆர். கே சுப்ரமணிய்ய, சின்னக்கண்ணுயிரய, ஆறுமுகம் பிள்ளை மற்றும்பலர் பேசினார்கள்.

சந்திரன் காலேஜ் ஸ்கூல்.

298, இடையர் வீதி, கோயமுத்தூர்.

ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C. விக்கும் 20-வயதிற்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C. இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.

தலைவர்:— **S. R. Chandran.**

குறைந்த விலையில்

நம்பிக்கையான இடம்

K. ராமச்சந்திரன்,

பித்தளைப்பாத்திர வியாபாரம்

பெரியகடை வீதி,

கோவை.

JAIHIND

TEL. COW. PHONE. 536.

REGISTERED TRADE MARK. ESTD. 1896.

USE

COW & CALF

BRAND

PURE GHEE

RAJA VENKATRAM GHEE STORES

PROP: V. C. ALAGIRISWAMY NAIDU

COIMBATORE.

அறிவிப்பு.

உறுதிக்கும், நேர்த்தியான வேலைப்பாட்டிற்கும் சிக்கனத்திற்கும் உத்திரவாதமுள்ள

டால்மியா போர்ட்லண்டு

சிமிட்டியை

யாவரும் எளிதில் பெற்று உபயோகிக்கும் பொருட்டு

பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பழனி

ஆகிய இடங்களில் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

நா. மகாலிங்கம்,

டால்மியா சிமிட்டி ஏஜண்டு, பொள்ளாச்சி.

உலகப் பிரசித்திபெற்ற பல்லடம்

உரிமையாளர்:

P. A, ரஹீம் சாயபு,

பல்லடம்,

ஏஜண்ட்:

A. K. யாகூப் சாயபு,

பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி

உபயோகியுங்கள்.

'லக்க ஜோசியம்'

(கே. பி. வி.)

31-8-51 முதல் 6-9-51.

1	2	3	4	5	6	7	8	9
A	B	C	D	E	F	G	H	I
J	K	L	M	N	O	P	Q	R
S	T	U	V	W	X	Y	Z	

K. RAMAN
2 9 1 4 1 5, 2+9+1+4+1+5
=22, 2+2=4 இந்த நெம்பர் 4 தான்.
. RAMAN என்கிற எண்ணிற்கு வ

சிய எண்நெம்பர் 4யை கவனித்தால் பலன்கள் தெரியவரும். அதே மாதிரியாக ஒவ்வொருவருடைய பெயர்களை கணித ரீதியாக செய்துபலன்பார்க்கவும். அப்படி உங்களுக்கு வசியஎண் தெரியாவிட்டால் எமக்கு எழுதவும் பூரு ஆயுள் பலன்தெரியவேண்டுமானால் 14-அணா மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் மூலமாக அனுப்பினால் விபரமான பூரு ஆயுள் பலன்கிடைக்கும்.

கே. பி. வாசுதேவன்,
453, ஐ ரோடு, திருவொற்றியூர்,
சென்னை.

ஐக்கியவர்த்தக குமாஸ்தாக்கள் சங்கம்.

ஒற்றுமை நிலையத்தில் சங்கத்தின் கமிட்டிக்கூட்டம் ஸ்ரீ எஸ். டேவிட் கவுண்டர் தலைமையில் கூடியது. 50—51ம் வருஷ வரவு சிலவு கணக்கு அங்கீகரிக்கப்பட்டு புதுவருட நிர்வாகிகளாக, தலைவர் ஸ்ரீ டேவிட் கவுண்டர், உபதலைவர் ஸ்ரீ பட்டிமுத்துக்கவுண்டர் பொக்கிஷதார் ஸ்ரீ சுப்ரமணியம்பிள்ளை காரியதரிசிகள் ஸ்ரீ வெங்கட்டராமன் துரைசாமி மற்றும் 10 கமிட்டிமெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

சுதந்திர தினத்தன்று ராமனுபுரம் கிராமத்தில் ஹரிஜனசிறுவன் ரங்கன் தேசியக் கொடி யேற்றுவித்தான். ஷை யூரில் தா. கா. க. காரியதரிசி ஸ்ரீ ஆர். பி. ஆறுமுகக்கவுண்டரால் விழாவைக்கொண்டாட சிறந்த ஏற்பாடுகள் செய்யபபட்டன.

கிழமை	1	2	3	4	5	6	7	8	9
வள்ளி	குடும்பத்தில் சந்தோஷ செய்தி.	நற்செய்தி	கெட்டநாள்	சும்மாயிருப்பது நலம்	கோபம்	ஸ்திரி சுகம்	இஷ்டசித்தி	சுகம்	பிரயாணம்
ரி	மனதைரியம்	பணவரவு	அதிக கஷ்டம்	வைத்திய சிலவு	பணவரவு	மனஸ்தாபம்	அபிவிருத்தி	குடும்ப ஒற்றுமை	பணவரவு
யிறு	உபாயமான தகவல்கள்	வாகனப் பிராப்தி	மத்திபநாள்	நண்பர் சந்திப்பு	போஜன சவுக்கியம்	கோபம்	நூதன சிநேகம்	வியாதி	அதிக சிலவு
ள்	குடும்பசுகம்	சுகவாழ்வு	மனக்கிலேசம்	ஆயாசம்	சயனசுகம்	பிரயாணம்	ஆடை ஆபரணங்கள்வரவு	சுபவிரயம்	வெற்றிகரமான நாள்
ய்	தெய்வபக்தி அதிகமாகும்	சிறந்தஆரோக்கியம்	துயரம்	துக்கம்	நல்வரவு	துயரம்	சும்மாயிருப்ப தேநலம்	வெற்றிகரமானநாள்	ஸ்திரிவசியம்
	பணவரவு	தெய்வபக்தி	சுபசெய்தி	பரஸ்பரமான குடும்ப வாழ்க்கை	பேச்சு ஏமாற்றம்	மத்திபநாள்	ஸ்பெருலேஷன் வெற்றி	நல்ல ஊதியம்	முன்னேற்றம்
	தீர்க்க ஆலோசனை	காரிய அனுகூலம்	காரிய அனுகூலம்	நண்பர்கள் சந்திப்பு	ஆரோக்கியக் குறைவு	கஷ்டமான நாள்	சுபம்	நற்செய்தி	ஆனந்தக் களிப்பு

ருடத்தில் பலன்தரும் மாஞ்செடி விலை ரூ. 10—0—0

P. K. P. சாமி

மாஞ்செடி வியாபாரர்,
சத்திரம்ரோடு. பொள்ளாச்சி.

விவசாயிகளுக்கு ஓர் வேண்டுகோள்.

த்தில் பலன் தரும் ஒட்டுமாஞ்செடிகளும், சாத்துக்கொடி மைத்தென்னம்பிள்ளைகளும், காய்கறி விதைகளும், பலவித களும் பிரபல மிராசுதாரர்களிடம் கொடுத்து நன்மதிப்பு ளேம். தங்கள் அன்பார்ந்த ஆர்டரையும் ஆதரவையும் எதிர் ம். எமது புக்குடன் வரும் ஏஜண்டுகளுக்கு ஆதரவு கொடுக் ட்டுக்கொள்ளுகிறேன்; தங்கள் ஆர்டரில் கண்டுள்ளசெடிகளை ருக்குச்சமீபத்திலுள்ள ரயில்வேஸ்டேஷனுக்கு எங்கள் சில ப்பப்படும். பேக்கிங் சார்ஜ் தனி. ஆர்டர் கொடுப்பவர்கள் ரூ. 25 அட்வான்ஸ் செலுத்தவேண்டும்.

போலி வியாபாரிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்!

ஒரு வருஷத்தில் பலன் தரும் ஒட்டுமாஞ்செடி விலை ரூ 5—0—0. 3-வருஷத்தில் பலன்தரும் ஒட்டுமாஞ்செடிகள், இதர பழச்செடிகள் செடி 1-க்கு விலை ரூ 2—8—0. சீக்கிரம் பலன் தரும் ஒட்டுமாஞ்செடிகள் சாத்துக்கொடி ஆரஞ்சு; கொய்யா, மாதுளை, பிலா, கடப்பிலா, சப்போட்டா ஆப்பிள் தேசுருநாத்து பாக்குநாத்து சவுக்குநாத்து 30-மாதத்தில் காய்க்கும் சிலபதெதென்னை கொழும்பு, சிலோன், யாழ்ப்பாணம் மலபார் முதலிய தென்னம்பிள்ளை வகைகளும் இங்கிலீஷ் காய்கறி விதைகளும் நாட்டுக்காய்கறி விதைகளும் பங்களாக்களை அழகுபடுத்தும் கொடி செடி புஷ்பவிதை வகைகளும் கிடைக்கும். தங்கள் தேவைக்கு ஆர்டர்கொடுக்கவும். எங்கள் நர்சரியில் வளரும் செடிகளும் விதைகளும் உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.

R. S. பணி நர்சரி,

மாஞ்செடி டிப்போ

பெண்கள் பொதுக்கூட்டம்.

முதியோர் கல்விக்கமிட்டியின் சார்பில் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் பெண்கள் பொதுக்கூட்டம் ஸ்ரீமதி கிரிஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதலில் காலஞ்சென்ற ருக்மணி லக்ஷ்மிபதி அவர்களைப்பற்றி ஸ்ரீமதி தங்கம் அனந்தராம் பேசியபின் அனைவரும் 2-நிமிடம் எழுந்து நின்று அனுதாபம் தெரிவித்தனர் ஸ்ரீமதி சுபத்ராதேவி அனைவரையும் வரவேற்றுப்பேசினார். ஸ்ரீமதி பாலாம்பாள், ஸ்ரீ பால்ஜேசுதாசன் பேசியபிறகு கோவை நிர்மலா கல்லூரி கணித விரிவுரையாளர் ஸ்ரீமதி சரஸ்வதி பி. ஏ. அவர்கள் முதியோர் கல்வியும் பெண்களும் என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள். ஸ்ரீ பி. எஸ் சுப்பையன் நன்றிகூற ஜனாப் ரசூல்கான் சினிமாக்காட்சி காண்பிக்க சிறப்பாகமுடிந்தது.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட் &
A, C. C. நீலகிரி பிராண்டு
சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
[illegible]. நாகமாணிக்கம்செட்டியார் & பிரதர்,
போன் நெ. 85.
கடை வீதி & மார்க்கட் வீதி

மாடர்ன் கபே,
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

எனாமல் & போட்டோ போர்டுகளுக்கு
M. முத்து, பெயிண்டிங் ஒர்க்ஸ்,
மரப்பேட்டை வீதி.

மாணவர் இலக்கிய மன்றம்.

14-ம் தேதி சமத்தூர் ராமய்யங்கார் உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கிய மன்றப் பொதுக்கூட்டம் ஸ்ரீ ராமகிருஷ்ணய்யர் தலைமையில் நடைபெற்றது. சுகாதாரமும் மாணவர் கடமையும் என்பதுபற்றி மாணவர்கள் மு. சீனிவாசன், கே. சி. மாணிக்கம், சுப்ரமணியம் ஆகியோர் பேசினார்கள். காரியதரிசி முத்துக்குமாரசாமி நன்றி கூறினார்.

சுடச்சுட!?

(அ. பாசித்.)

○ அரிசி சாப்பிடுவோர் பழக்கத்தை மாற்றிக் கொள்ளவேண்டும்.

(மந்திரி திருமலராவ்.)

கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித் தான் குடிக்கத்தான் பழகினபின் அரிசி சாப்பிடும் பழக்கம் மாற்றிக்கொள்வது வெகு சுலபம் என்கிறார் ரேஷன்வாங்கி அலுத்துப்போன ஆசாமி ஒருவர்.

○ ஆளத்தெரிந்தவர்களின் அழகு இதுதானா! ஆட்சியை எங்களிடம் விட்டுப்பார்.

(நெடுஞ்செழியன்)

ஆட்சியை உங்களிடம் விட்டால் ஐந்தே நாட்களில் பாக்கிஸ்தானுக்கு காட்டிக்கொடுத்து ஐந்தாம்படை வேலைசெய்துவிடுவீரே என்று விளாசுகிறார் திராவிட எதிர்ப்பு முன்னணி வீரர் ஒருவர்.

○ எங்கள் அறிவுப்பிரச்சாரமே ரத்தப்புரட்சியைத்தடுக்கிறது.

(அண்ணாத்துரை)

அதற்குத்தான் அத்தாட்சியாக விளங்குகிறது தேனியில் நடந்த அறிவுப்பிரச்சாரத்தின் அ[illegible] என்று கூறுகிறார் தேனி [illegible] உழைப்பாளி ஒருவ[illegible]

○ இந்தியா குழந்தை[illegible] குழந்தைக்கு வியாதி வருவது சகஜம். இதை பொருட்படுத்தாமல் ஒவ்வொரு பெண்மணியும் நாட்டின் முன்னேற்றத்திற்காக பாடுபடவேண்டும்.

(ஒருபெண் பிரசங்கம்)

இதையெல்லாம் அந்த தாஸர்களும், பித்தர்களும் செழியர்களும் உணர மாட்டேன்கிறார்களே என்று வருத்தப்படுகிறார் ஒரு முற்போக்காளர்.

○ ஆண்களின் தேகவலிமையைக்காட்டிலும் பெண்களின் மனோவலிமை அதிகம்.

(ஒரு பெண் பேச்சாளர்)

அப்படியா சமாசசாரம்! ஆண்கள் இல்லாத இடத்தில இதைச் சொல்லி அப்ளாஸ் வாங்க விட்டீர்களா என்று ஆத்திரப்படுகிறார் ஒரு ஆண்பேச்சாளர்.

மாணவர் [illegible]

சமத்தூர் ராமய்யங்கார் பள்ளிமாணவர்கள் கே. சி. மாணிக்கம் கோட்டைக்கொண்டு தாலூக்கா ஆபீஸிலும், தங்கள் பள்ளியிலும் அணிவகுப்புசெய்து காட்டினார்கள்.

கேள்வி—பதில்.

—:(பர்ஸாத்): —

கே; நமது மந்திரிகள் ஒரு ஊருக்கு விஜயம் செய்தால் மழை வருவது ஏன்?

(பி. எஸ். வெங்கிட்டு.)

ப: நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும்மழை அதுபோல நமது மந்திரிகளும் நல்லவர்களாக இருக்கலாம்!

கே: வரும் தேர்தலைப்பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

(என். வெங்கடாசலம்)

ப: அது ஒரு விஷப்பரீட்சை

கே: நம் இந்தியாவில் பிரதி தினமும் எத்தனைபேர் இறக்கிறார்கள் என்று உம்மால் சொல்லமுடியுமா?

(எஸ். கந்தசாமி)

ப: நான் என்ன சித்ரகுப்தனா!

கே: கணவன் எப்போது மனைவி சொ[illegible]ற்படி நடக்கிறான்? மனைவி எப்போது கணவன் சொற்படி நடக்கிறாள்?

(பி. வி. சாமி)

ப: கணவன் மணமானபுதியதில் ம[illegible] விதன் கணவன் சம்பளம் வாங்கிய மாதத்தில் முதல் வாரத்தில் சொற்படி நடக்கிறாள்!

கே; லலிதா — பத்மினி சகோதரிகள் தற்சமயம் நடனம் ஆடுவதை விட்டு நடிக்கக்காரணம் என்ன?

(எம். வெள்ளிங்கிரி)

ப: அவர்கள் நடிப்பதும் நடனமாடுவதுபோலத்தானே இருக்கிறது!

கே: இப்போது ஏன் அண்ணாத்துரையே நாடகத்தில் நடித்து கழகங்களுக்கு நிதிதிரட்டித் தருகிறார்!

(என். பாலு[illegible]

ப: திராவிட எதிர்ப்புப் புயலின் கா[illegible]ணமாக மரணப்படுக்கைகளில் கிடக்கும் கழகங்களுக்கு நிதி திரட்டி உயிர் கொடுக்கத்தான் ஸார்!

கே: மணமகள் படத்தில் நடிப்[illegible] முதல் ஸ்தானம் யாருக்கு கொடுக்கலா[illegible] இப்படத்தில் சிறந்தபாட்டு எது?

[அழகுமதி]

ப: லலிதா, பாலையாவுக்கு முதல்ஸ்தானம் கொடுக்கலாம்! சிறந்த பாட்டு, லலிதா, பத்மினி (இரவல் குரலில்) பாடும் எல்லாம் இன்பமயம். ஸரி ... கம ... பத நி ... நீ ... சா.!!

தபால் பெட்டி நெ. 25.

N.B :— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்.

வெற்றிகரமாக நடைபெறுகிறது
கோவை கர்னாடிக்கில்

மூன்றாவது வாரம்
எனெஸ்கே பிலிம்ஸ்

மணமகள்

நடிகர்கள்
கிருஷ்ணன், மதுரம், பாலையா, சகஸ்ரநாமம், டி. பாலசுப்ரமணியம்
லலிதா — பத்மினி, பாண்டியன், புளிமூட்டை ராமசாமி.

டைரெக்ஷன்:
என். எஸ். கிருஷ்ணன்

கோவை நீலகிரி ஜில்லாக்களுக்கு விநியோகஸ்தர்கள்:
கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட்,
கோயமுத்தூர்.